BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**பத்து லட்சம் மரங்கள் வளர்ப்பதற்கான திட்டம் : 2020 ஆம் ஆண்டிற்குள் ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்கவுமாக 50,000 புதிய மரங்களை வளர்த்தல்**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 19, 2020) – ஒவ்வொரு வருடத்திலும் ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்கவுமாக 50,000 புதிய மரங்களை நட்டு வளர்ப்பது என்ற முன்மொழிவை மாநகர மன்றம் இன்றைக்கு நிறைவேற்றியது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ளுமுகமாக, இது இன்னொரு முயற்சியாகும்.

2019 ஆம் ஆண்டில், கால நிலை மாற்றம் பற்றிய ஒரு அவசரப் பிரகடனத்திற்கு ஆதரவாக மாமன்றம் வாக்களித்தது; அதே சமயத்தில், இந்த நகரத்தில் வெளியிடப்படும் கிரீன் ஹவுஸ் புகை உமிழ்வுகளை 2050 ஆம் ஆண்டு வாக்கில் 80 சதவீத அளவுக்கு குறைக்கவும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்த நகரமும் அதனுடன் இணைந்து பணியாற்றுபவர்களாகிய துப்புரவுத் தொழிலாளர்கள், ரீஜன் ஆஃப் பீல், பள்ளி வாரியங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து சராசரியாக வருடத்திற்கு 43,000 மரங்களை நட்டு வளர்த்துள்ளனர். குறைந்தது 7,000 மரங்களை கூடுதலாக வருடம்தோறும் நட்டு வளர்ப்பதன் மூலம் *ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப்பார்வை* (Brampton 2040 Vision) க்கு மிக அருகாமையில் சென்று விடலாம்; அவ்வாறாகவே 2040 ஆம் ஆண்டிற்குள் 1, 000,000 மரங்கள் எனும் இலக்கையும் அடைந்துவிடலாம்.

கால நிலை மாற்றத்தின் பாதிப்பை தணிப்பதிலும் அதற்கேற்ப மாற்றிக்கொள்வதிலும் நகர்ப்புற காடுகள் வளர்ப்பதிலும், இருக்குமிடங்களை இன்னும் அழகுபடுத்துவதிலும், பொதுமக்கள் ஆரோக்கியத்திற்கு துணி நிற்பதிலும் மரங்கள் முக்கியமான பங்காற்றுகின்றன. பத்து லட்சம் மரங்கள் வளர்ப்பதற்கான திட்டமானது, பசுமை சோலையை மேம்படுத்தி சுற்றுச்சூழல் அமைப்பிற்கான சேவைகளைக் கொண்டு சேர்க்கும் விதமாக இன்னும் அதிக மரங்களை நட்டு வளர்க்கவிருக்கிறது; குறிப்பாக இது சாலையோரங்களில், பொதுமக்களுக்கான பூங்காக்களில், மற்றும் இதர வசிப்பிடங்கள் மற்றும் வணிக/தொழில் அமைப்பு வளாகங்கள்தோறும் இருக்கின்ற நகரமைப்புக்குச் சொந்தமான காலியிடங்களில் செய்யப்படவிருக்கின்றது.

இதை இப்படியே நீடித்திருக்க வைக்கும் தன்மைக்காக இந்த மாநகரம் கடப்பாடு கொண்டிருக்கிறது; இந்த முயற்சிகள் பசுமை நகரம் ஒன்றை நிர்மாணிக்க அதன் பங்கினைச் செய்யும். இதுவே மாநகர மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாகும்.

**விரைவான கூற்றுக்கள்:**

- தற்போது ப்ராம்ப்ட்டன் நகரில் சுமாராக 3.6 மில்லியன் மரங்கள் உள்ளன; இது நகரின் மொத்த நிலப்பரப்பில் 18 சதவீதம் ஆகும்.
- பத்து லட்சம் மரங்களுக்கான திட்டமானது, புதிய மரங்களை நடுவதில் கவனம் செலுத்துகிறது. 2040 ஆம் ஆண்டின்போது பத்து லட்சம் மரங்கள் எனும் இலக்கை அடைய, இதனுடன் ஆண்டுதோறும் நடப்பட்ட மரங்களையும் சேர்த்து இன்னும் 7000 மரங்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்பட வேண்டும்.
- இதற்கான பொருள் கொண்டு வருதல், பராமரித்தல் மற்றும் நகர்புற காடுகளைக் கண்காணித்தல் ஆகியவை தொடர்பான செயல் குறிப்புக்கள் தற்போது உருவாக்கப்பட்டுவரும் ***நகரின் நகர்ப்புற காடுகளின் மேலாண்மை திட்டத்தினால்*** செயல்படுத்தப்படும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரை பசுமையான ஒரு நகரமாக ஆக்கும் முயற்சியின் இன்னொரு பரவசமடையச் செய்யும் முயற்சி இதுவேயாகும்; நகர நிர்வாகம் அதன் வகையில் காலநிலை மாறுதலை எதிர்கொள்ள அதன் பங்கினை ஆற்றுகிறது. *கால நிலை மாறுதல் மற்றும் சக்திக்கான மேயர்களின் உலகளாவிய உடன்படிக்கை* [Global Covenant of Mayors for Climate and Energy], யின் ஒரு உறுப்பினராக இருக்கும் நான், இப்படியான துணிச்சலான மற்றும் சவால் மிக்க யுக்தியை இந்த ஆண்டிலேயே நடைமுறைப்படுத்துவதை எதிர் நோக்கி காத்திருக்கிறேன்; இதைவிடவும் சிறப்பான சுற்றுசூழலை போற்றிப்பராமரிக்கின்ற முனைப்புக்களை, வரவிருக்கும் ஆண்டுகளில் எதிர்பார்க்கிறேன்."

– *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"2050 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டனில் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வதை 80 சதவிகிதம் அளவிற்கு குறைப்பதற்கான எங்கள் குறிக்கோள் ஒரு சவாலான விஷயமாக இருப்பினும், எங்கள் சமூக கூட்டு முயற்சியினால் ஒரு மில்லியன் மரங்கள் நடும் திட்டத்திற்கான இலக்கை நாம் அடைய முடியும்."

*- பால் வின்செண்ட், பிராந்திய வார்டு எண்கள் 1 & 5 மற்றும் தலைவர், பொதுப்பணி மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

"ப்ராம்ப்ட்டனில் சில அற்புதமான பசுமையான இடங்கள் உள்ளன; மேலும் ஒரு மில்லியன் மரங்கள் நடும் திட்டம் என்பது ஒரு பரவசமூட்டும் முன்முயற்சியாகும்; கூட்டாண்மை மூலம், பசுமை நகரமாக இருப்பதற்கான கவுன்சிலின் முன்னுரிமை கொண்ட விஷயமாக தொடர்ந்து இருப்பதற்கு, எங்கள் அர்ப்பணிப்பு நிறைந்த ஊழியர்களுக்கு இது உதவுவதுடன், எங்கள் வசிப்பிடவாசிகள் மகிழ்ந்து அனுபவிக்க இன்னும் அதிகமான மர நிழல்களையும் உருவாக்குகிறது.."

*– டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca